போராட்டம் நடந்து சில காலம் சென்றதற்குப் பின்னால், தண்டனை அடைந்தவர்களை விடுதலை செய்யவேண்டுமென்ற நியதியை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கடைப்பிடித்து வந்தார்கள். அந்த நியதி காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. இன்று மொழிப் போராட்டம் நடந்து சில வருடங்கள் கழிந்ததற்குப் பின்னால், அந்த உணர்ச்சிகள் மாறிய கால கட்டத்தில், அதில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யக் கூடிய நியதியை அரசு ஏற்றுக்கொள்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதில் தவறு இல்லை, நியாயந் தான்.

மாநில வீட்டுவசதி வாரியக் கட்டடம்

* 490 வினா—**திரு எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை நகரத்தில் உள்ள "ஸ்டேட் அவுஸிங் போர்டு" கட்டடம் எந்த ஆண்டில் எவ்வளவு ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது ?

(இ) தற்போது அங்கு கூடுதல் மாடி கட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(உ) ஏர்கண்டிஷன், பர்னீச்சர் இவைகளுக்கான தொகை எவ்வளவு ?

(எ) மதிப்பீட்டுத் தொகையைக் குறைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா : (அ) மாநில வீட்டுவசதிவாரியக் கட்டிடம் 1964-ம் ஆண்டில் ரூ. 16·25 லட்சம் செலவில் கட்டப்பட்டது.

(இ) ரூ. 4·77 லட்சம்.

(உ) வாரியம் அவை கூடும் அரங்கத்தில் தட்ப வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் முறைக்கும், அரங்கத்தில் அவை கூடுவதற்கான வசதிகளைச் செய்வதற்கும் ரூ. 94,000 செலவாயிற்று. வாரியக் கட்டிடம் முழுவதிலும் மேசை, நாற்காலி போன்ற வசதிகள் செய்வதற்கு ரூ. 1,04,800 செலவாயிற்று. இந்தத் தொகை ரூ. 16·25 லட்சத்தில் அடங்கும்.

(எ) இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டதன் நோக்கமே, அதற்காகச் செலவு அதிகமாக இருக்கிறது என்ற முறையைக் கொண்டுதான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தொகையை ஆடிட் செய்யவோ அல்லது அரசாங்கம் செக் பண்ணுவதற்கோ ஏதாவது யோசனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இந்தக் கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டிருக்கின்றன. இனிமேலும் அப்படிப்பட்ட கணக்குகளை ஆடிட் செய்வது வழக்கத்தில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Thiru K. VINAYAKAM : Sir, may I know whether any room in this buidling has been air conditioned. To my knowledge, there is none.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : வாரியம் அவை கூடும் அரங்கத்தில் தட்ப வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் முறைக்கும், அரங்கத்தில் அவை கூடுவதற்கான வசதிகளைச் செய்வதற்கும் 94,000 ரூபாய் செலவாயிற்று. ஒரு ரூம் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருக்கிறது.